# செயற்பொறியாளர்,நீ.வ.து., நம்பியாறு நீர்த்தேக்கத்திட்டக் கோட்டம், வள்ளியூர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைககள்

பிறப்பிப்பவர்: பொறி.அ.ஆக்னஸ்ராணி,பி.இ.,
செயற்பொறியாளர்,நீ.வ.து.,

**செயல்முறை ஆணை எண். இ3 / 1168 / 2021/ நாள்: 15 .06.2022**

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கே.உலகநாதன், உதவியாள் தரம்-2ன் மகன் திரு.ஜெ.மைக்கேல் செல்வ சுதாகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் (2டி) எண்:59, பொதுப்பணித்துறை, நாள்:20.10.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர்,நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்:எஸ்3(4)/42297/2013/நாள்:14.12.2020.
3. இவ்வலுவலக செயல்முறை கடித எண்:இ3/925/2020/நாள்:23.12.2020.
4. இவ்வலுவலக கடித எண்:இ3/1168/2021/நாள்:18.02.2022.
5. கண்காணிப்புப்பொறியாளர்,நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களின் கடித எண்:ப2/521/2022/நாள்:10.03.2022.
6. தலைமைப்பொறியாளர்,நீ.வ.து., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடித எண்:அ2/3269/2022/நாள்:18.03.2022.
7. அரசு கடித எண்:2849/பி1/2022-2, நாள்:25.04.2022.
8. தலைமைப்பொறியாளர்,நீ.ஆ.அ., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்:அ2/3269/2022/நாள்:06.05.2022.
9. கண்காணிப்புப்பொறியாளர்,நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களின் கடித எண்:ப2/521/2022/நப1வரு./நாள்:17.05.2022.

*****

பார்வை 2-ல் கண்ட முதன்மை தலைமைப்பொறியாளர்,நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு.ஜெ.மைக்கேல் செல்வ சுதாகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பார்வை -3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் மூலம் இக்கோட்டத்தில் 23.12.2020 முற்பகல் முதல் பணிமேற்கொண்டு பணிபுரிந்து வருகிறார். அன்னாரது பணியினை அவர்தம் பதவியில் பணிவரன்முறை செய்யும் பொருட்டு பார்வை -4-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் கண்காணிப்புப்பொறியாளர்,நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அக்கருத்துரு கண்காணிப்புப்பொறியாளர்,நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களிடமிருந்து தலைமைப்பொறியாளர்,நீ.வ.து., மதுரை மண்டலம், மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டு , அவர்களிடமிருந்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 7-ல் காணும் அரசு கடிதத்தின்படி பார்வை 1-ல் காணும் அரசாணை (2டி) எண்:59, பொதுப்பணித்துறை, நாள்:20.10.2020-ன் படி தனியர் பொருட்டு (அப்போது நடைமுறையில் இருந்த அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்:26.06.1995 மற்றும் அரசு கடிதம் (நிலை) 202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்:23.01.2020-க்கு விலக்களித்தும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 20(6) (b)-யை தளர்வு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதால் தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.12.2020 மு.ப முதல் வரன்முறை செய்ய மீண்டும் அரசாணைக்கு விலக்கோ அல்லது விதிகளுக்கு தளர்வோ பெறவேண்டிய அவசியம் எழவில்லை என தெரிவித்தும் பத்தி 5-ல் பணிநியமன அலுவலர் நிலையில் திரு.ஜெ.மைக்கேல் செல்வ சுதாகர், இளநிலை உதவியாளரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.12.2020 மு.ப முதல் வரன்முறை செய்ய அரசாணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தனியரது பணியினை வரன்முறை செய்தும், அந்நாள் முதல் தகுதிகாண் பருவம் தொடங்கியதாக கருதியும் உத்தரவுகள் வழங்கப்படுகிறது.

இவரது கல்வித்தகுதி, வயது வரம்பு, உடல்நலத்தகுதி ஆகியவைகள் இவர் கருணை அடிப்படையில் நியமனம் செய்யும் போது சரிபார்க்கப்பட்டுள்ளது.

இவர் தகுதிகாண் பருவம் துவங்கிய நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் விடுப்பு காலம் நீங்கலாக தகுதிகாண்பருவம் நிறைவு செய்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

15/06/22

செயற்பொறியாளர்,நீ.வ.து.,
நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டக்கோட்டம்,
வள்ளியூர்.

15/6/22

பெறுநர்:
திரு.ஜா.மைக்கேல் செல்வ சுதாகர்,
இளநிலை உதவியாளர்,கோட்ட அலுவலகம்,
வள்ளியூர்.

D:\E3 14.06.2022\E 3 LETTER\Tamil Lr\Tamil Proceedings.docx